# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
## THIRUVIDAIMARUTHUR

| | | |
|---|---|---|
| Calender | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : CC 94/2020 | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : LW7/PW4 | Village: |
| Name | : நவோதியா | Age : |
| Father's/Husband's Name | : ராமசாமி | Taluk : |
| Nationality | : Indian | |
| | | Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 15/07/2022**

சாட்சியை திருவிடைமருதூர் காவலர் திருமதி.கௌசல்யாதேவி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**முதல் விசாரணை**:

நான் தற்போது கரிக்குளம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். கடந்த 8 வருடத்திற்கு முன்பு கரிக்குளம் மெயின்ரோட்டில் திருவிடைமருதூர் காவல் நிலைய போலிசார் செல்வி வீட்டிற்கும், பாலு வீட்டிற்கும் இடையே நடந்த சண்டை சம்மந்தமாக விசாரணை செய்து, சம்பவ இடத்தை பார்வையிட்டு, மாதிரி வரைபடம் வரைந்தார்கள். பார்வை மகசரில் என்னிடம் கையொப்பம் வாங்கி கொண்டார்கள். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். **(மேற்படி பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் கையொப்பம் செய்த பார்வை மகசரில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசார் கேட்டுக்ககொண்டதற்காக அதில் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். சண்டை சம்மந்தமாக எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை** இல்லை

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**